நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

# ஏ. ஜே. கனகரட்னா

11.10.2006

சி. ஜெயசங்கர்

## ஏ.ஜே. என்றொரு மனிதர்

ஏ.ஜே.கனகரட்னா என்ற பேரறிஞர் இன்று இல்லை, தமிழர்தம் சமூகங்களில் சில பகுதிகளில் அவரது இழப்பு நினைவு கூர்தலுக்கும், உரையாடலுக்கும் உரியதாகி இருக்கிறது.

ஏ.ஜே. அவர்கள் நினைவு கூர்தலுக்கும், உரையாடலுக்கும் உரியவராகியிருப்பது அவரது புலமைத்துவ பகிர்வு முறைமையாலேயாகும். அறிவைப் பகிர்தலில் ஏ.ஜே. தயக்கங்கள் எதுவும் அற்றவராக இருந்தார். அவரது வாசிப்பும் யோசிப்பும் எந்தவித தயக்கங்களும் அற்ற பகிர்தலுக்கானதாக இருந்தது. அதுவே அவரது இயல்பாகவும் இருந்தது. ஆனால் அவர் ஒருபொழுதும் கதைப்பதற்காகவும் அல்லது அச்சுறுத்துவதற்காகவும் வாசிக்கவில்லை என்பது தான் அறிந்து கொள்வதற்கு அவசியமானதுமாகும்.



ஏ.ஜே. உடனான அறிவுப் பகிர்தல் அள்ளித் தெளித்தல்களாக இருக்கவே இருக்காது. சந்தேகமானவற்றையும், தெளிவற்றவைகளையும் ஏ.ஜே. பகிர்ந்து கொள்ள மாட்டார். உறுதிப்படுத்திவிட்டுச் சொல்வதாக நேரடியாகவும் அழுத்தம் திருத்தமாகவும் தெரிவித்து, தான் உறுதிப்படுத்திக் கொண்டதன் பிற்பாடே உரியவர் மறந்தாலும் அவரைத் தொடர்பு கொண்டு, நினைவுபடுத்தித் தெளிவுபடுத்துபவராக ஏ.ஜே. இருந்தார்.

ஆங்கிலச் சொற்களைக் கூட, சந்தேகம் எனில், அகராதியை பார்த்து உறுதிப்படுத்திய பின்புதான் அர்த்தம் சொல்லுவார். அவ்வாறாக இருக்கலாம் அல்லது இவ்வாறாக இருக்கலாம் எனத் தெளிவின்றிக் கதைப்பது அவரது அகராதியில் கிடையாது

நிகழ்ச்சிகளின் அழைப்பிதழ்கள், நிகழ்ச்சி நிரல்கள், கையேடுகளை அச்சிடும் வேளைகளில் ஆங்கிலப் பதங்களை சரி பார்க்க அச்சகங்களில் இருந்து அவசர அவசரமாக ஏ.ஜே.யிடம் சென்றால் ஏ.ஜே.யும் தற்செயலாக ஏதாவது சந்தேகம் கொண்டார் என்றால் அவரும் அகராதியை புரட்டிப் புரட்டிப் பார்க்கத் தொடங்குவார்.

ஏ.ஜே. தனக்கு சந்தேகமானவற்றை எவருக்கும் சொல்லமாட்டார். அறிஞர் என்பாரின் மெய்யான தன்மையை மிக எளிமையாகவும் இயல்பாகவும் வழக்கப்படுத்தி இருந்தார். அறிஞர் என்பவர் எப்படியானவர் என்பதற்கு ஏ.ஜே. உரைகல்லாக இருந்தார். தெரியாததைத் தெரியாது என்று சொல்லும் புலமைத்துவ நேர்மை ஏ.ஜே.யிடம் நிறைந்திருந்தது. இதுதான் ஏ.ஜே. வெகு சிலர் மத்தியில் மாத்திரம் அறியப்பட்ட, அவரது பெறுமதி உணரப்பட்ட அறிஞராக இருந்ததற்குக் காரணமாகவும் இருக்கலாம்.

ஆழமான புலமையை உடைய ஏ.ஜே. தெளிவாகவும் சுருக்கமாகவும் மட்டுமல்லாது மிக அருந்தலாகவும் எழுதுபவராக இருந்தார். இது அவரது இயல்பாகவே இருந்தது. அதுவே ஒரு சாராரால் விமர்சிக்கவும் படுவதாயிற்று.

ஏ.ஜே. எப்பொழுதும் தான் வாசிப்பவற்றை, கிரகிப்பவற்றை மிகவும் சுவாரசியமாகக் கலந்துரையாடுவதில் விருப்புடையவராக இருந்தார். கலந்துரை

யாடுவதனூடாகவும் அறிவு பகிரப்படுவதும், பரவலாக்கப்படுவதும் அறிவுப் பகிர்வு முறைமை என்பது நவீன எழுத்து மைய, அச்சு மைய அறிவியல் உலகில் மறந்துபோன ஒன்றுமட்டுமல்ல. மறுக்கப்பட்ட ஒன்றாகவும் இருக்கிறது.

இதனால் எழுதாத அல்லது எழுத முடியாத அறிஞர்கள் பொதுமக்கள் மத்தியில் அறிஞர்களாக அறியப்பட்டிருக்கவில்லை அல்லது படிப்பறிவற்றவர்களாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதுதான் நவீன அறிவியல் சமூகத்தின் அதிகார கட்டமைப்பாக இருக்கிறது.

ஆனால் ஏ.ஜே. நவீன அறிவியல் விடயங்களை வாய்மொழி மூலம் அதிகளவில் பரவலாக்கியவராக இருக்கிறார். இத்தகைய அறிவியல் பரவலாக்க முறைமையின் ஆளுமைகளின் உருவாக்கம் காலத்தின் தேவையுமாகும்.

ஏனெனில் சமூகங்களின் அறிவுருவாக்கத்தில் எழுத்து மைய, அச்சு மைய அறிவுப் பகிர்வின் அல்லது பரவலாக்கத்தின் மட்டுப்பாட்டையும், கட்டுப்பாட்டையும் விளங்கிக் கொள்வதும் மிகவும் அவசியமாகும்.

அதிகாரங்களுக்கு மாற்றான செயற்பாடுகளில் வாய்வழி அறிவுப் பகிர்வின் முக்கியத்துவம் அதிகம் உணர்ந்து கொள்ளப்பட்டிருப்பதும் பயன்படுத்தப்பட்டிருப்பதும் வரலாறாகவும் நடைமுறையாகவும் இருக்கின்றது. இதனால்தான் அதிகாரமையங்கள் வாய்வழி அறிவுப் பகிர்வை அங்கிகரிப்பதில்லை.

இதன் மிகப் பொருத்தமான உதாரணந்தான் வாய்வழிச் செய்திகளை ‘வதந்திகள்’ என்றும், தகவல் ஊடக வழிச் செய்திகளை ‘செய்திகள்’ என்றும் கருத்துருவாக்கம் செய்யப்பட்டிருப்பதாகும்.

‘வதந்திகள்’ என்றால் பொய்யென்றும், ‘செய்திகள்’ என்றால் மெய்யென்றும் சிந்தனையில் பதியப்பட்டிருக்கிறது. ஆனால் நாங்கள் எல்லோருமே ‘வதந்தி’களில் உள்ள மெய்மைத் தன்மையையும் ‘செய்தி’களில் உள்ள பொய்மைத் தன்மையையும் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

இலக்கிய வரலாற்றில் வாய்மொழி இலக்கியங்களை அவதானிக்கும்போது அங்கு பெண்களின் குரல்கள் வலுவாகக் காணப்படுவதையும் தொடர்புபடுத்திப் பார்ப்பதும் பொருத்தமானதாக இருக்கும்.

ஏ.ஜே. யுடனான உரையாடல்கள் நூலகங்களிலும், புத்தகசாலைகளிலும் நூல் தலைப்புக்களை, நூலாசிரியர் பெயர்களை பளிச்சிட்டு காட்டி தெரிந்தெடுக்க வைக்கும்.

அவற்றை எமக்கு பரிச்சயமானவையாக உணர வைக்கும். இது புத்தகத்தை எடுத்து வாசிப்பதற்குத் தூண்டுவதாக இருக்கும்.

வாசிப்பதற்கு சிரமமான புத்தகங்களின் சாராம்சத்தை ஏ.ஜே. விளங்கப்படுத்தி விடுவார். அதன் பின்னர் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். வாசித்து விளங்கிக் கொண்டதை ஏ.ஜேயுடன் பகிர்ந்து கொள்ளும் பொழுதுகளில் விளங்கிக் கொள்ளப்பட்டவற்றின் சரி, பிழை பார்த்துக்கொள்ளப்படும்.

நூலாசிரியர்களை, நூல் தலைப்புக்களை குறிப்பாக ஆங்கிலம்வழி அறியப்படுகின்ற அறிஞர்கள் மற்றும் கலைஞர்களை அவர்களது எழுத்துக்களை மிகவும் இயல்பாகவும், எளிமையாகவும் ஏ.ஜே கலந்துரையாடுவார். விடயங்களையும் நபர்களையும் ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தி உரையாடும் ஏ.ஜே.யின் ஆற்றல் பரந்ததும் ஆழமானதுமான அவரது வாசிப்பையும் அது சார்ந்த அவரது யோசிப்பையும் புலப்படுத்துவதாக இருக்கும்.

ஏ.ஜேயின் நண்பர்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கிறார்கள். ஏ.ஜேயை அவரது வாசிப்பை அவர்கள் அறிந்தவர்கள். எனவே எந்த முற்றுகைக் காலங்களிலும் ஏ.ஜேக்கு புதிய நூல்கள், சஞ்சிகைகள் கிடைத்து விடும். ஏ.ஜேக்கு கிடைப்பவை தேவைப்படும், வேண்டப்படும் ஏனைய அனைவருக்கும் கிடைப்பதாக இருக்கும்.

ஏ.ஜேயின் காலடிகளைப் பின் தொடர்ந்து நூல்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வது வீண் விரயங்களைத் தவிர்ப்பதாக இருக்கும். ஆனால் அது ஒரு பொழுதும் ஒற்றையடிப் பாதையில் பயணிப்பதாக இருக்காது. ஏனெனில் ஏ.ஜே.யின் வாசிப்பு பல பரிமாணங்கள் கொண்டது. எதிரெதிர் நிலைப்பாடுகள் கொண்ட, வித்தியாசமான நோக்குகளை உடைய முக்கியமான நூல்களை அவர் தேடித் தெரிந்து வாசிப்பார்.

இதன் காரணமாக, அவரது உரையாடல்கள் குறித்த ஒரு விடயம் சார்ந்து வெவ்வேறு கோணங்களில் பார்ப்பதாக இருக்கும். இதுதான் அவரை வரட்டுத் தனங்களுக்கும் வெட்டி விவாதங்களுக்கும் ஆட்பட்டுப் போவற்கு ஒருபொழுதும் இடமளிக்கவில்லை என்பது வெளிப்படையானது.

எண்பதுகளின் பிற்பகுதிகளில் குடாநாடு முற்றுகைக்குட்பட்டிருந்த காலகட்டங்களில் பின்காலனியம், பின்நவீனவாதம் பற்றியும் தமிழில் அவை அறிமுகப்படுத்தும் முறைபற்றியும், அதாவது நாங்கள்தான் முதன்முதலில் அறிமுகப்படுத்துகிறோம் என்று எம். ஜி. ஆரின் புதுப்படத்தை முதல்நாள் முதல் காட்சியில் பார்த்து பெருமிதப்படும் விடலைப் பருவ மனநிலை சூழல்களை கலந்துரையாடினோம். இதன் ஒரு பகுதியாக சுரேஸ் கனகராசா அவர்கள் பின்நவீனவாதம் தமிழில் அறிமுகப்படுத்தும் முறைமை பற்றிய ஒரு கட்டுரையையும் எழுதியிருந்தார்.

நாங்கள்தான் முதன் முதலில் பாடல்களை ஒலிபரப்புச் செய்கின்றோம் என்ற பாணியில் அறிவியல் விடயங்களையும் அவசர அவசரமாக அறிமுகப்படுத்துவதன் ஆபத்தை எப்போதும் எச்சரிப்பவராகவும் ஏற்றுக்கொள்ளாதவராகவும் ஏ.ஜே. இருந்தார். மேலும் எங்களது கலந்துரையாடல்கள் கலந்துரையாடல்களுக்கானதாக மட்டும் இருக்க முடியவுமில்லை. ஏனெனில் அவ்வாறு இருக்க விடுகின்ற சூழ்நிலையை காலம் எங்களுக்கு வழங்கவில்லை.

எனவே மனிதர்களாக நாங்கள் வாழ வேண்டுமெனில் எவற்றை, எப்படிச் செய்ய வேண்டும் என்பதை சிந்தித்தே ஆகவேண்டியிருந்தது. செயற்பட்டே ஆக வேண்டியிருந்தது. நாங்கள் வாழ்வதற்காக சிந்திக்கவும், செயற்படவும், கலந்துரையாடி னோம். அந்தச் செயற்பாட்டின் ராணித் தேனியாக ஏ.ஜே வாழ்ந்தார்.